Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No.CC.NO. 98/2023
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS (PW) No. 07 , Page.No.16/26

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. கோதண்டம் | | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. அனுமுத்து | தொழில் | உதவி ஆய்வாளர் |
| கிராமம் | ஜோலார்பேட்டை | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 59 |
| எதிரி ஆஜர் | | | 1-6 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 13th day of July 2026.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**அ.சா. 07 திரு. கோதண்டம் முதல் விசாரணை**

1. நான் தற்போது ஜோலார்பேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். எங்கள் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றிய திரு. காதர்கான் பணிமாறுதல் பெற்று சென்றுவிவட்டதால் நான் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 21.01.2023 அன்று சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு. சம்பத் நிலைய பொறுப்பில் இருந்த போது திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அ.சா.1 விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் திரும்பி நிலைய மனு எண்.48/2023 வழங்கினார். அந்த வழக்கை விசாரரைணக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் திரு. காதர்கான் புகார் வாக்குமூலத்தை பார்வையிட்டு இதச பிரிவுகள் 147, 294(பி), 323, 324, 506(2) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **(அந்த முதல் தகவல் அறிக்கை என்னால் அ.சா.ஆ.05 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் 22.01.2021 காலை 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் விக்ரம் மற்றும் சேகர் ஆகியோர் முன்னிலையில் சம்பவ

இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தார். **(அந்த மாதிரி வரைப்படம் என்னால் அ.சா.ஆ. 6 ஆக குறியீடுசெய்யப்படுகிறது)** அன்றைய தினம் காலை 07.45 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தில் இருந்த இரும்பு கம்பி ஒன்று, மரகொம்பு ஒன்றை கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தாயார் செய்தார். பின்னர் இவ்வழக்கு சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்பு இவ்வழக்கில் காயம்பட்ட அசா1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரணை செய்து காயசான்றும் வாக்குமூலமும் பெற்றார். **(அந்த காயச்சான்று என்னால் அ.சா.ஆ.07 ஆக குறியீடுசெய்யப்படுகிறது)** பின்னர் தனது புலன்விசாரணையை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 294(பி), 323, 326, 506(2) ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை பெற்று தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

//**உண்மை நகல்**//

KODHAVADI SUBRAMANIAN DINESH

Judicial Magistrate No.I Tirupattur
Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH
Location: Tirupattur

**நீதித்துறை நடுவர் எண். 01**
**திருப்பத்தூர்.**